For Private Circulation Only

ஜூலை 2012 மலர் 5 இதழ் 3

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

India ECHOES
ONE WORLD ONE HUMANITY




## மாஸ்டரைப் பற்றிய செய்திகள்

### சென்னையில் மாஸ்டர்

அப்யாசிகளிடையே உரையாடிக்கொண்டிருந்தபோது மாஸ்டர் "ஓர் அவசர உணர்வை மனதில் பதியவைக்கும் அதே நேரத்தில், பய உணர்வை நீக்குவதே நமது பணியாகும். வழக்கமாக, பயம் என்பது அவசரமாக செய்யப்பட வேண்டிய எந்தவொரு விஷயத்துடனும் இணைந்தே இருக்கிறது. ஆனால், சகஜமார்க்கத்தில் நாம் செய்யவேண்டியது யாதெனில், மனதில் அவசர உணர்வினை பதியவைத்து பய உணர்வினை நீக்குவதேயாகும்" என்றார்.

### புத்தாண்டு விழாக்கள்

தமிழ் புத்தாண்டு தினமான ஏப்ரல் 13ம் தேதி மாஸ்டர் சத்சங்கம் நடத்தினார். ஒவ்வொருவரின் பார்வையும் அவர்களின் அன்புக்குரிய மாஸ்டரின் மேல் இருந்தது. ஒவ்வொருவரும் உள்ளார்ந்த நிலையில் மாஸ்டரிடம் நேரிடையாக தொடர்பு கொண்டிருந்ததை அனைவரும் உணர்ந்தனர். மாஸ்டர் திருமணம் ஒன்றை நடத்திவைத்தார். அவர் மிகவும் களைப்பும் சோர்வும் அடைந்த நிலையிலும் குடிலில் அவரை வாழ்த்த வந்த அப்யாசிகளை சந்தித்தார்.

சனிக்கிழமை ஏப்ரல் 14ம் தேதி "விஷு" கேரளா மக்களின் புத்தாண்டு தினம். அன்று கேரளாவில் இருந்து சுமார் 150 அப்யாசிகள் மாஸ்டருடன் இருப்பதற்காக வந்திருந்தனர். அன்று மாலை குடிலின் வெளிப்புறத்தில் மாஸ்டர் அமர்ந்திருந்தார். பத்து பத்து பேர் கொண்ட குழுக்களாக அப்யாசிகள் மாஸ்டரை சந்தித்தனர். மாஸ்டர் ஒவ்வொருவர் மீதும் தனிக்கவனம் செலுத்தினார். பின்னர் பணியின் பொருட்டு உட்புறம் சென்றுவிட்டார். இவர்களில் பல அப்யாசிகள் அவர்கள் கொண்ட உணர்ச்சிப்பெருக்கினை வெளிக்காட்டும் நிலையில் இருந்ததை ஒருவர் காண முடிந்தது.

### அவருக்கு இடம் அளித்தல்

திங்கட்கிழமை ஏப்ரல்16 அன்று மொரோக்கோவில் இருந்து வந்திருந்த ஐந்து அப்யாசிகளுக்கு மாஸ்டர் சிட்டிங் கொடுத்து அவர்களிடம் உரையாடினார். அனைத்து அப்யாசிகளும் கண்களில் நீர் வடியக் காணப்பட்டனர். ஒரு சகோதரி அவரிடம் தன் அன்புக்குரியவர் மறைந்து போனதைப்பற்றிக் கூறியபோது மாஸ்டர் " ஒருவர் தன் இதயத்தை அதில் அனைவரும் இடம் பெறும் வகையில் விரிவாக்கிக்கொள்ளவேண்டும். எத்தனையோ அப்யாசிகள் வந்து செல்கின்றனர் அவர்கள் அனைவரும் மாஸ்டரின் இதயத்தில் இடம் பிடித்துள்ளனர். நாம் ஒரு சிலர் மீது மட்டும் அன்பு செலுத்துகின்றபோது அவர்களை இழக்க நேரிடுகையில் இழப்பினை உணர்கிறோம். ஆனால் இதயம் திறந்து இருக்கின்றபோது அது அனைவரையும் நேசிக்கின்றது. அங்கு இழப்பு என்பது இல்லை" என்றார்.

குடிலுக்குள் எப்போதும் அதிக எண்ணிக்கையில் மக்கள் இருப்பதையும், அவரால் இயன்ற அளவு அவர்களைச் சந்திக்க முயற்சி செய்த போதும் அவர்கள் அவரது தனிகவனத்திற்காக அவரைக் கட்டாயப்படுத்துவதையும் கண்டு மாஸ்டர் தன் அதிருப்தியினைத் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து, மாஸ்டர் குடிலைவிட்டு சில நாட்கள், வெளியே, வசதியான ஒரு இடத்தில் ஓய்வு எடுக்கச் செல்ல முடிவு செய்தார். அந்த இடம் இரகசியமாக வைக்கப்பட்டது. அங்கு மாஸ்டருக்கு தனிமையும் ஓய்வும் அளிக்கப்பட்டது. ஏப்ரல் 27 அன்று, மாஸ்டர் காட்டேஜுக்குத் திரும்பினார்.


### பாபுஜியின் பிறந்த நாள் விழா கொண்டாட்டங்கள்

ஞாயிற்றுக்கிழமை ஏப்ரல்29 அன்று, மாஸ்டர் காலை சத்சங்கத்தினை நடத்தி, எட்டுத் திருமணங்களை நடத்திவைத்தார். பின்னர் பணிக்குழுவின் கூட்டம் குடிலில் நடைபெற்றது. மாலை டென்மார்க்கிலுள்ள விராட்ஸ் சான்டே ஆசிரமத்தில், சகோ.பார்கவ் மற்றும் சகோ.கமலேஷ் ஆகியோரிடம் வீடியோ மூலம் தொடர்பு கொள்ள கருவிகள் பொருத்தப்பட்டது. மறு நாள் அங்குள்ள அப்யாசிகளுக்கு வீடியோ மூலம் உரை நிகழ்த்த திட்டமிட்டு மாஸ்டர் நேரில் வீடியோ கருவிகளின் இணைப்புகளைச் சரிபார்த்தார்.

30ம் தேதி மாஸ்டர் முன்னதாகவே வந்தார். அவர் நடத்திய சத்சங்கம் 1மணி 10 நிமிடங்கள் வரை நீடித்தது. அதன் பின்னர் உரை நிகழ்த்தினார். ஒளி உலகத்திலிருந்து வரும் மென் குரல்கள் புத்தகத்தின் நான்காம் தொகுப்பினை வெளியிட்டார். அத்துடன் மென்குரல் செய்திகளை, சிலர் தங்கள் சொந்த குரலில் எடுத்துரைக்கும் ஆடியோ சி.டி.யினையும் வெளியிட்டார். இதனை வெளியிட்டபின்னர், அதிலிருந்து சில மாதிரிச்செய்திகள் ஒலிபரப்பப்பட்டன. மாஸ்டர், மென்குரல்களை படிக்க வேண்டியதின் அவசியத்தினை வலியுறுத்தி மீண்டும் ஒரு சிறிய உரை நிகழ்த்தினார்.

காலை11 மணிக்கு சகோ. பாலசுப்ரமணியன் பேசினார். மாஸ்டர் இதனை, அவரது அலுவலகத்தில் இருந்தவாறே கவனமாகக் கேட்டார். அவரது பேச்சு நன்றாக மனதில் பதியும் விதத்தில் இருந்ததுடன், மாஸ்டர் மற்றும் அனைத்து அப்யாசிகளையும் தன்வசப்படுத்தியது. அவர், மாஸ்டர்களின் வாழ்க்கையில் இருந்து பல நிகழ்ச்சிகளை விவரித்தார். அத்தகைய மகாபுருஷர்களை வெறுமனே புகழ்ந்து துதிபாடாமல், அவர்களது வாழ்க்கையில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டும் எனவும், மேலும் அவர்களது வாழ்க்கை முறையினைப் பின்பற்ற வேண்டும் எனவும் நம்மை வலியுறுத்தினார்.

# எக்கோஸ் இந்தியா செய்திமடல்



மாஸ்டர் களைப்புடன் இருந்ததால், ஐரோப்பிய கருத்தரங்கின் வீடியோ அழைப்பிற்கான திட்டத்தை ரத்து செய்ய வேண்டி இருந்தது. பிற்பகலில், ரோமானியாவிலிருந்து வந்திருந்த 5 அப்யாசிகளை சந்தித்தார். மாஸ்டர், ரோமானியா மற்றும் ரஷ்யாவைப் பற்றிய தன் கவலையை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார். மேற்கத்திய ஆதிக்கம், ஒரு செல்வாதிக்க கலாச்சாரமாக உள்நாட்டு கலாச்சாரத்தை பாதித்துக்கொண்டிருக்கிறது என்றார்.

மாலை சத்சங்கம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, மாஸ்டர் தன் கோல்ப் வண்டியில் ஆசிரமத்தை சுற்றி வலம் வந்தார். வழியில், வண்டியை சிலமுறை இடையிடையே நிறுத்தி குழந்தைகளை சந்தித்தார். சகோதரி சௌமியா மற்றும் அவரது குழுவினரின் மகிழ்ச்சிகரமான நடன நிகழ்ச்சி, இனிமையான முறையில் மாலை நேர அமர்வை நிறைவுசெய்தது.

## கொண்டாட்டங்களுக்குப் பின்னான நிகழ்வுகள்

மே 4 தேதி, மாலை நேரத்தில், மிகப்பெரிய மரத்தை பெயர்த்தெடுத்து வேறொரு இடத்தில் நடும்பணியை கண்காணிக்க, மாஸ்டர் தோட்டத்திற்குச் சென்றார். பெரும்பாலான ஆயத்தப்பணிகள் முன்னரே முடிவடைந்திருந்தன. சில தன்னார்வ தொண்டர்கள் ஒன்றாக சேர்ந்து, மரத்தைப் பெயர்த்து புதிய இடத்திற்கு மாற்றினர். மாஸ்டர், பணியை கண்காணித்து, அனைவருக்கும் வழிகாட்டிவிட்டு, பிறகு மரத்திற்கு தண்ணீர் ஊற்றினார்.

மாஸ்டர், அமெரிக்க அப்யாசி சகோதரர் ட்ரேவர் வெல்ட்மென் என்பவரால் "மாற்றிக் கொண்டிருக்கும் தனிமை" என்ற தலைப்பில் வழங்கப்பட்ட TED நிகழ்ச்சியைப் பார்த்தார். நம்முடைய வாழ்க்கை எவ்வளவு இரைச்சல் மிக்கதாக ஆகிவிட்டது என்றும், தியானப் பயிற்சியின் மூலம் உள்முகத் தொடர்பை நாம் எவ்வாறு நம் வாழ்க்கையில் மீண்டும் கொண்டுவர முடியும் என்பதைப் பற்றியும் பேசினார்.

ஒரு மாலை வேளையில், மாஸ்டர் நடைக்கூடம் வழியாக தனது படுக்கையறையிலிருந்து அலுவலகத்திற்கு நடந்து வருகையில் ஒரு சகோதரியை சந்தித்தார். உடனடியாக பையிலிருந்து ஒரு பழத்தை எடுத்து அந்த சகோதரிக்கு கொடுத்தார். பழத்தைப் பெற்றுக் கொண்ட பிறகு சகோதரி, தான் கருவுற்றிருப்பதை மாஸ்டரிடம் கூறினார். மாஸ்டர் உடனே "ஆசிர்வாதம்" என்று கூறினார்.

மாஸ்டர், மற்றொரு இரவில், இரவு உணவிற்கு சற்று முன்பு, "புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது" என்று தமிழில் கூறப்பட்டுள்ளதை மேற்கோள் காட்டிய ஒரு அப்யாசியிடம் பேசிக்கொண்டிருந்தார். மாஸ்டர் அதைப் பற்றி விரிவாகக் கூறும்போது,அது, புலியின் அகம்பாவமோ அல்லது கர்வமோ இல்லை என்றும், அது தனக்கேயுரிய குணாதிசயத்துடன், இயற்கையின் விதிகளுக்கு எளிமையான முறையில் கீழ்ப்படிகிறது என்றும் கூறினார். விலங்கினங்களும், தாவர இனங்களும் அவ்வாறே செய்கின்றன; அவைகள் விட்டுக்கொடுக்காமல், விலகிச்செல்லாமல் முற்றிலுமாக தங்களுடைய குணாதிசயத்தில் ஊன்றியிருக்கின்றன. மனிதனும், விலங்கின் குணாதிசயங்களை வெளிப்படுத்திக்



கொண்டிருக்காமல், தன்னுடைய இயற்கையான "மனிதப் பண்புகளை" வெளிப்படுத்திக்கொண்டு வாழ வேண்டும்.

## பீதர் அப்யாசிகளுக்கான கருத்தரங்கம்

மாஸ்டர் மே 11 அன்று, அலகாபாத் வங்கிக்கு சென்றுவிட்டு, பீதரிலிருந்து வந்திருந்த சுமார் 100 அப்யாசிகளைச் சந்திக்க Dorm A க்கு சென்றார். அவர் ஹிந்தியில் உரையாற்றிவிட்டு, கலந்துகொண்ட அனைவருக்கும் சத்சங்கம் அளித்தார். மாலையில் அவருக்கு, உடல் நலம் குன்றி, சுவாசிப்பதில் சிரமம் ஏற்பட்டது. காலையில், அவர் சென்ற வங்கியில் அதிகப்படியான தூசு இருந்ததால், அது அவரை பாதித்திருந்தது.

மே 13 ஞாயிற்றுக்கிழமை அன்று மாஸ்டர் சத்சங்கம் நடத்தினார். அதன் பின்னர் சகோ.சக்ரபாணி சிறிய உரை நிகழ்த்தினார். இயந்திரங்களின் திறன் மற்றும் ஆற்றலை விட, மனிதனின் ஆற்றல்தான், தேவை மற்றும் மிகப்பெரிய இடர்ப்பாடுகளின் போது மற்றவர்களுக்கு உதவி செய்கிறது என்றும், மாஸ்டரை நமது வழிகாட்டியாகக் கொண்டு, அனைத்து இடர்ப்பாடுகளையும் வென்று, குறுகிய காலத்தில் நம்முடைய ஆன்மீக இலட்சியத்தை அடைய, நம்முள் ஒளிந்துள்ள ஆற்றல்களை நாம் பயன்படுத்த வேண்டும் என்ற உண்மையையும் வலியுறுத்தினார்.

மாஸ்டர் ரஷ்யர்களைப் பற்றியும் மொழிகளை கற்றுக்கொள்ளுதலைப் பற்றியும் பேசிக்கொண்டிருந்தார். ஒரு அப்யாசி, "மாஸ்டர் என்னால் ஒரு புதிய மொழியை கற்றுக்கொள்ள என்னை ஈடுபடுத்த இயலவில்லை, ஏனெனில் அதற்கான நோக்கத்தை நான் பார்க்கவில்லை" என்றார். அதற்கு மாஸ்டர், "நோக்கம், நீங்கள் அந்த மொழியில் கைதேர்ந்தவராக மாறுவதில்தான் உள்ளது. வேறு எந்த நோக்கத்தை நீங்கள் விரும்புகிறீர்கள்? மேற்கத்திய கலாச்சாரம் நம்மை மிகவும் கடுமையாக பாதித்துள்ளது. நாம் எந்த ஒன்றை செய்தாலும், அதிலிருந்து நான் எதைப் பெறுவேன் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறோம். நான் எவரிடமாவது தியானத்தை துவங்கக் கூறும்போதும் கூட, அவர்கள் எதைப் பெறுவார்கள் என்று கேட்கிறார்கள். நீங்கள் எதையும் பெறப்போவதில்லை, ஆனால் ஏதோவொன்றாக மாறுகிறீர்கள். இதே உண்மைதான் இந்த விஷயத்திற்கும் பொருந்தும்" என்றார்.

# எக்கோஸ் இந்தியா செய்திமடல்

"....ஆகவே, இடம் மற்றும் காலத்தால் ஏற்படும் இடைவெளியை அன்பு முக்கியமற்றதாக்கி விடுகிறது. நீங்கள் ஒருவரை நேசித்தால், அவன் அல்லது அவள் எங்கு இருக்கிறார் என்பதைப் பற்றி கவலைப்படுவதில்லை."அவர் எப்பொழுதும் என் மனதில் இருக்கிறார்" என்று நீங்கள் கூறுகிறீர்கள். ஆகவே, நீங்கள் மனதிலோ, அல்லது இதயத்திலோ எதையும் பெறாமல் இருந்தால் என்று நாம் சொல்வதைப்போல, காலம் மற்றும் இடத்தின் கோரிக்கைகளுக்கும், அவற்றின் வரையறைகளுக்கும் உட்பட்டவர்களாகி விடுகிறோம். ஆகவே, நீங்கள் அப்யாசியாக இருக்கலாம் அல்லது இல்லாமலும் இருக்கலாம், நீங்கள் ரிஷியாக இருக்கலாம் அல்லது இல்லாமல் இருக்கலாம், நீங்கள் அன்பு செலுத்தவில்லை என்றால் அங்கு இடைவெளி இருக்கும்."

மே 18, 2012 சென்னை

## கருத்தரங்கு - அந்தமான் & நிக்கோபார் தீவுகள் மற்றும் ஹூப்ளி (வ.கர்நாடகா):

அந்தமான் & நிக்கோபார் தீவுகளிலிருந்து வந்திருந்த ஒரு அப்யாசி குழு மற்றும் ஹூப்ளியிலிருந்து வந்திருந்த மற்றொரு அப்யாசிகள் குழுவானது, மே 15ம் தேதியிலிருந்து ஒரு வார காலம் ஆசிரமத்தில் தங்கியிருந்தனர். பயணச் செலவு மிக அதிகமாக இருந்தபோதிலும், இந்த கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக, மிகவும் முயன்று, அந்தமான் & நிக்கோபார் தீவுகளிலிருந்து, 100 க்கும் மேற்பட்ட அப்யாசிகள் வந்திருந்தார்கள் என்பதை அறிந்த மாஸ்டர் மிகவும் மகிழ்ச்சியுற்றார்.

அந்த அப்யாசிகளை மாஸ்டர் 18ந் தேதியன்று சந்தித்தார்.









சகோ. சோமகுமார், அவர்களிடையே உரையாற்றினார். அதன் பின்பு மாஸ்டர் உரையாற்றி சிட்டிங் வழங்கினார். அந்த உரையில் மாஸ்டர், "அன்பு இருந்தால், இடம் மற்றும் காலத்தால் ஏற்படும் இடைவெளிகள் முக்கியமற்றதாகி விடும்" என்று கூறினார். மே 19 ந் தேதியன்று மாஸ்டர், ஒரு பக்கமாக சாய்ந்து தூங்கியதால் முதுகு வலியுடன் எழுந்தார். வலியிலிருந்து விடுபட அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. மாலையில் புத்தக நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள புகைப்பட கண்காட்சியை பார்க்க திட்டமிட்டிருந்தார். புகைப்பட கண்காட்சிக்குச் சென்று வந்த பிறகு, தனது அலுவலக அறைக்குச் சென்று, அங்கு கணக்கு வழக்குகளைச் சிறிது நேரம் பார்த்துவிட்டு, பின்னர் மீண்டும் காட்டேஜிற்கு வந்தார்.

இரவு உணவிற்குப் பிறகு, சுமார் பத்து வயது சிறுவன் ஒருவன், ஒரு கடிதத்துடன், மாஸ்டரைச் சந்திக்க உறுதியாக காத்திருந்தான். இறுதியாக மாஸ்டரைச் சந்திப்பதற்கான வாய்ப்பைப் பெற்று, மாஸ்டருடன் நல்ல முறையில் சிறிது நேரத்தைக் கழித்தான். அந்த சிறுவன் தன்னுடைய பிரச்சினையை மாஸ்டரிடம் கூறினான். மாஸ்டரும் அப்பிரச்சினைக்கு சில தீர்வுகளை வழங்கினார். மாஸ்டர் அச்சிறுவனின் கவலையை முழு அக்கறையுடன் கவனித்ததைப் பார்க்க சுவாரசியமாக இருந்தது.

## ஆசிரமத்தில் கட்டிட வேலை

தியான கூடத்தின் மேலே, கூரையில் போடப்பட்டிருந்த ஓடுகள் நீக்கப் பட்டன. நீர்க்கசிவைச் சரிசெய்வதற்காக ஒரு புதிய கான்கிரீட் அடுக்கு போடப்பட்டது. இந்த பணியைச் செய்வதற்காக, வார கடைசியில், பல்வேறு மையங்களிலிருந்து வந்திருந்த அப்யாசிகள் அந்த பணி நடக்க உதவி புரிந்தனர்.

தொடர்ச்சியாக நடைபெறும் சத்சங்கங்கள், நூலக தொகுதியின் தரை தளத்திற்கு மாற்றப்பட்டிருந்தன. ஞாயிறு சத்சங்கம் மட்டும் தியான கூடத்தில் நடத்தப்பட்டது.

மே 20 ந் தேதியன்று மாஸ்டர் முழுமையாக ஒரு மணி நேரம் சத்சங்கம் வழங்கினார். மதியம், இலண்டன் ஆசிரமத்தின் திறப்பு விழா இருந்ததால், மாஸ்டர் வீடியோ தொலைபேசி மூலம், இலண்டனில் கூடியிருந்த அப்யாசிகளுடன் தொடர்பு கொண்டார். அது குறுகிய நேரமாக இருந்த போதிலும், இலண்டன் அப்யாசிகள் மாஸ்டரைப் பார்த்து சிலிர்ப்படைந்தனர்.

மாலையில், மாஸ்டர், அந்தமான் & நிக்கோபார் தீவுகளிலிருந்து வந்திருந்த அப்யாசிகளுடன் சேர்ந்து ஒரு குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார். இதன் பிறகு, மருத்துவ மையம் செல்ல வேண்டும் என மாஸ்டர் திட்டமிட்டிருந்தார். ஆனால் மாஸ்டர் திடீரென மனதை மாற்றிக் கொண்டு மீண்டும், காட்டேஜிற்குள் சென்றார். வரவேற்பறையில் அமர்ந்திருந்த அனைவருக்கும் சத்சங்கம் வழங்கினார். நிச்சயமாக இது அனைத்து அப்யாசிகளுக்கும் ஆனந்த அதிர்ச்சியாக இருந்தது.

மாஸ்டர் மே 21 முதல் 26 வரை காயத்ரியில் இருந்தார். அப்யாசிகள் அனைவரிடமும் அங்கு செல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது. மாஸ்டர் மே 26 மதியம் ஆசிரமத்திற்கு வந்தார். மாலையில், மும்பையிலிருந்து வந்திருந்த அப்யாசிகளுடன், அவர்கள் ஆசிரம செயல்திட்டம் பற்றி உற்சாகமாக கலந்துரையாடினார்.

## கர்நாடகா மற்றும் கோயம்புத்தூர் அப்யாசிகளுக்கான கருத்தரங்கு

மே 27ம் தேதி மாஸ்டர் சத்சங்கம் வழங்கினார். அதில் கர்நாடகா மற்றும் கோயம்புத்தூரிலிருந்து வந்திருந்த 600 அப்யாசிகளும், சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள மையங்களிலிருந்து வந்திருந்த அப்யாசிகளும், அதிக அளவில் கலந்து கொண்டனர். சிறிது நேரம் கழித்து Dorm A-க்கு சென்று அங்கு கூடியிருந்த அப்யாசிகளுக்காக உரையாற்றினார். அவர் மிக முக்கியமாக, அன்பைப் பற்றி வலியுறுத்தி, "அனைவரும் நேசிக்கும் அவரை நாம் நேசிக்கவில்லையென்றால், அவர் நேசிக்கும் அனைவரையும் நாம் எப்படி நேசிக்கமுடியும்" என்று கூறினார். புள்ளிகள் மற்றும் மண்டலங்கள் இன்னும் பிறவற்றின் அடிப்படையில் அப்யாசிகளின் வளர்ச்சியைப் பற்றிய தலைப்பில், மாஸ்டர் மிகவும் வலியுறுத்தி கூறியது, "நாம் அங்கு இல்லையென்றால், நாம் எங்குமே இல்லை" என்பதாகும். இதன் மூலம், நாம் புள்ளிகள் மற்றும் மண்டலங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், எப்பொழுதும் நம் இறுதி லட்சியத்தை நோக்கமாக கொண்டிருக்க வேண்டுமெயொழிய, இந்த இடை நிலைகளை அல்ல என்பதை வலியுறுத்தினார்.

# எக்கோஸ் இந்தியா செய்திமடல்






## கோவா அப்யாசிகள்

மே 27ம் தேதி முதல் 31ம் தேதி வரை மாஸ்டர் மீண்டும் காயத்ரியில் இருந்தார். கோவாவிலிருந்து வந்திருந்த அப்யாசிகளைச் சந்திப்பதற்காக, மே 31ம் தேதி ஆசிரமத்திற்கு வந்தார். அவர் சுமார் 11 மணி அளவில் Dorm-A குச் சென்றார். அங்கு 25 அப்யாசிகள் மட்டுமே வருகை புரிந்திருந்த நிலையில், சுமார் 150 முதல் 200 அப்யாசிகளைக் காணலாம் என்று நம்பிக்கை கொண்டிருந்ததாக அவர் கூறினார். மாஸ்டர் சிறிது நேரம் உரையாற்றி விட்டு பிறகு சத்சங்கம் வழங்கினார். தனது உரையில், சகஜ மார்க்கப் பயிற்சி முறையானது, மிகவும் எளிமையான மற்றும் ஆழமாகப் பதியக்கூடிய முறையாகும் என்றும் இந்த எளிமையான பயிற்சி முறையை ஒவ்வொருவருக்கும் விளக்குவதில் எந்த சிக்கலும் இல்லை என்றும் மாஸ்டர் வலியுறுத்தினார். சத்சங்கத்திற்குப் பிறகு, மாஸ்டர் களைப்புடன் காணப்பட்டார். பிறகு மெதுவாக தனது குடிலுக்கு திரும்பிச் சென்றார்.



இரவு உணவிற்குப் பிறகு, மாஸ்டர், ஒமேகா பள்ளியின் பழைய மாணவர்கள் சங்க உறுப்பினர்கள் சிலரைச் சந்தித்தார். மிகவும் குறைந்த அளவு நிதியையே அவர்கள் கையாண்டு வந்த போதிலும், பதிவேடுகள், செலவுகள், ரசீதுகள் முதலானவற்றை அவர்கள் எவ்வாறு பராமரித்து வருகின்றனர் என்பதைக் குறிப்பிட்டுக் கேட்டார். இது நம் அனைவருக்கும் ஒரு பாடமாகும். முயற்சி எவ்வளவு சிறியதாகவோ அல்லது பெரியதாகவோ இருப்பினும் அதற்கான உழைப்பு என்பது எப்போதும் ஒன்றே.

## ஒமேகா பள்ளி பழைய மாணவர்களுக்கான கருத்தரங்கம்

ஜூன் 1ம் தேதி அன்று, நூலகத்தின் மேலே கட்டப்பட்டிருந்த கருத்தரங்கக் கூடத்தினை மாஸ்டர் துவக்கி வைத்தார். மேலும், ஒமேகா பள்ளியின் முன்னாள் மாணவர்களின் இரண்டு குழுவிற்கான, ஒரு வார கால கருத்தரங்கத்தையும் துவக்கி வைத்தார். அவர்களிடம் உரையாடிவிட்டு, பிறகு அவர்கள் அனைவருக்கும் ஒரு சிட்டிங் வழங்கினார். பிறகு, நண்பகலில் மாஸ்டர் காயத்ரிக்குப் புறப்பட்டுச் சென்றார். கன்ஹா செயல் திட்டமானது நல்ல முறையில் சென்று கொண்டிருப்பதாலும், அதற்கான பதிவு வேலைகளை தாமே செய்ய விரும்பியதாலும், ஹைதராபாத்திற்குச் செல்ல மாஸ்டர் திட்டமிட்டிருந்தார். இறுதியில், தனது உடல் நிலையைக் கருத்தில் கொண்டு தனது பயணத்திட்டத்தைக் கைவிட்டார்.

அவர் ஹைதராபாத்திற்குச் செல்ல முடியாவிட்டாலும், ஜூன் 6ம் தேதி கன்ஹா செயல்திட்ட தன்னார்வலர்களை காயத்ரிக்கு அழைத்திருந்தார். அவர்களுடன் நீண்ட நேர சந்திப்பிற்குப் பிறகு அவர்கள் அனைவருக்கும் அன்பளிப்புகள் வழங்கினார். மேலும் இந்த செயல்திட்டத்தை வெற்றிகரமானதாக உருவாக்கியதற்காக வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

ஜூன் 8 ம் தேதி வெள்ளிக்கிழமை அன்று, மாஸ்டர், சகோ. M.D.சந்தானகோபாலன் அவர்களுடைய இல்லத்திற்கு, அவருடன் ஒரு வார காலம் தங்கியிருப்பதற்காகச் சென்றார்.

ஜூன் 14ம் தேதி வியாழக்கிழமை அன்று, மாஸ்டர் ஆசிரமத்திற்குத் திரும்பினார். அடுத்த நாள் மாஸ்டர், பல் சிகிச்சையை மேற்கொள்ள வேண்டியிருந்தது. அவர் அதிகமான வலியில் இருப்பதையும், அவரது முகம் வீங்கியிருப்பதையும் காண முடிந்தது.

## லக்னோ அப்யாசிகளுக்கான கருத்தரங்கம்

லக்னோவிலிருந்து சுமார் 650 அப்யாசிகள் ஒரு கருத்தரங்கிற்காக ஒன்றாகக் குழுமியிருந்தனர். சகோ.சக்ரபாணி, அன்பு மற்றும் பேராவல் ஆகிய பொருள் படுமாறு உடைய சில பாடல் வரிகளை இணைத்து, ஹிந்தியில் பேசினார். மிகவும் எளிமையான நடையில் செய்திகளைத் தெரிவித்தார்.

சனிக்கிழமை அன்று மாஸ்டர், ஒரு பிரிபெக்ட் சிட்டிங் வழங்கினார். பிறகு, அவர் உடல் நலமின்றி உணர்ந்தார். அவர் ஓய்வு எடுக்க வேண்டியிருந்ததால், லக்னோவிலிருந்து வந்திருந்த அப்யாசிகளை அவர் சந்திக்கவில்லை. சகோ.வினோத் மிஸ்ரா, "அனைத்து சூழ்நிலைகளிலும் மாஸ்டரை எவ்வாறு மகிழ்ச்சியாக வைத்துக் கொள்வது" என்பது குறித்து உரையாற்றினார். இந்த தலைப்பு குறித்து பின்னர் மாஸ்டர் பேசுகையில், கொடுக்கும் மனப்பான்மையை, அதாவது, ஒரு உள்ளார்ந்த பக்தி மனப்பான்மையுடன் இது கொடுக்கப்பட வேண்டும் என்பதை அவர் வலியுறுத்தினார்.

மாலையில், மாஸ்டருக்கு இரண்டு சந்திப்புகள் இருந்தன. ஒன்று லக்னோ மற்றும் பிற மையங்களில் இருந்து வந்திருக்கக்கூடிய அப்யாசிகளின் குழந்தைகளை சந்திப்பது. மற்றொன்று, அந்த மையங்களில் இருந்து வந்திருக்கக்கூடிய பிரிபெக்ட்களை சந்திப்பது. சுமார் 80 குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் மாஸ்டரைச் சந்தித்தனர். அனைவருக்கும் அவர் இனிப்புகள் வழங்கி, அவர்களிடம் பேசினார். பிறகு அவர் லக்னோ மையத்திலிருந்து வந்திருந்த சுமார் 17 பிரிபெக்ட்களுக்கு ஒரு சிட்டிங் வழங்கினார்.

17ம் தேதி அன்று காலை மாஸ்டர் சத்சங்கம் வழங்கினார். அதிக அளவில் வந்திருந்த, சென்னை மற்றும் அருகிலிருந்த மையங்களைச் சார்ந்த அப்யாசிகள் குழுவினராலும், லக்னோவிலிருந்து வந்திருந்த அப்யாசிகள் குழுவினராலும் தியானக் கூடமானது நிரம்பியிருந்தது.

# எக்கோஸ் இந்தியா செய்திமடல்




லக்னோவிலிருந்து இருந்து வந்த அப்பாசிகளை முன் தினம் சந்திக்க இயலாததால், மாஸ்டர் அவர்களை Dorm-Aல் காலை 11 மணிக்குச் சந்திக்க முடிவு செய்தார். மாஸ்டர் ஹிந்தியில் ஒரு உரை நிகழ்த்தினார். அதில் அவர் சரியான செயலை நிகழ்காலத்தில் செய்வதன் அவசியம் மற்றும் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, அதை எதிர்காலத்திற்கு தள்ளி போடக் கூடாது என்றும் கூறினார். அவர் தவிர்க்க இயலாத வயதாகும் நிகழ்வைப் பற்றியும், வயதாகிய பிறகு ஆன்மீகத்தை பின்பற்றலாம் என எண்ணுவது எவ்வளவு தவறானது என்பதை பற்றியும் உரையாற்றினார். அவர் பாபூஜியின் விவேகத்தை பற்றிய சொல்லாக்கத்தை நினைவு கூர்ந்தார். அதாவது, நாம் அடுத்த கணத்தில் இறந்துவிடுவோம் என நினைத்து வாழ்வதுதான் விவேகமான செயல் என்றார். அவரது உரைக்கு பிறகு, மாஸ்டர் இன்னும் ஒரு சிட்டிங் அளிக்க வேண்டுமா என்று வினவினார். ஏனெனில், எல்லோரும் அப்பொழுதுதான் அன்றைய காலை சத்சங்கத்தில் பங்கேற்றிருந்தனர். அப்யாசிகள் சிட்டிங் அளிக்குமாறு தாழ்மையுடன் கேட்டனர். குழுமியிருந்த அப்யாசிகள் அனைவரும் அந்த நிகழ்வு முழுவதும் மிகுந்த கட்டுப்பாட்டுடன் இருந்தனர். மேலும் அவர்கள் அமைதியாக அமர்ந்து, மாஸ்டர் சுதந்திரமாக நடந்து செல்ல ஏதுவாக, அவரைக் கூட்டமாக சூழ்ந்து கொள்ளாமல் இருந்தனர்.

## மாஸ்டர் மற்றும் அவரது பணிகள்

மாஸ்டர் ஜுவன் என்ட்ரிக்ஸின் 'நமது குழந்தைகள்' மாறுபட்ட இனங்களாக இருப்பார்களா? என்ற தலைப்பின் TED உரையினை பார்த்தார். அது மனதை ஊடுருவதாகவும், சிந்தனையைத் தூண்டுவதாகவும் அமைந்த உரை. அவர் அதை மிகுந்த ஆர்வத்துடன் கேட்டார். மேலும், மனித இனத்தின் பரிணாம வளர்ச்சி பற்றிய ஒரு சில கருத்துக்களை கூறினார். மாஸ்டரின் வலது தோள்பட்டையில், ஒரு சில வாரங்களாகவே வலி இருந்தது. மேலும் இயன் முறை மருத்துவர் மேற்பார்வையில், பொறுமையுடன் குறிப்பிட்ட பயிற்சியை தினந்தோறும் செய்தார். அவருடைய தினசரி நடவடிக்கைகள், எல்லா சூழ்நிலைகளிலும் தொடர்ந்தன. புதிய பிரிபெக்ட்கள் பற்றிய புதிய பரிந்துரைகள், அவரின் உடல்நிலை கருதி நிலுவையில் இருப்பதாக தெரிவித்தபோது, அவர் உடனே அவர்களில் நால்வரை அழைக்கும்படி கேட்டுக்கொண்டார்.

மாஸ்டர் குழந்தைகளுடன் நேரத்தை செலவிடுகிறார். அவர்களுடன் மகிழ்ச்சியாக, அவர்களில் ஒருவரைப் போல் தொடர்பு கொள்கிறார். ஒரு தம்பதியினர் புதிதாக பிறந்த குழந்தையுடன் மாஸ்டரை சந்தித்து பெயரை சூட்டுமாறு கேட்டனர். மாஸ்டர் சிறிது நேர சிந்தனைக்குப் பிறகு 'சரஸ்வதி' என்ற பெயரை சூட்டினார். மாஸ்டர் அந்த குழந்தையுடன் பேசினார். அந்த குழந்தை பதிலுக்கு புன்னகையும் சிரிப்புமாக மாஸ்டருக்கு பதிலளித்தது. ஒரு அப்யாசி அவரிடம் "குழந்தைகள் உங்களுடன் தொடர்பு கொள்ளுமா, மாஸ்டர்?" என்று வினவினார். அவர் பதிலளிக்கையில் "இல்லை, அவர்கள் தொடர்பு கொள்வதில்லை, ஆனால் என்னை அறிந்து கொண்டவுடன் புன்னகைக்கின்றனர்" என்றார். நம்மில் எத்தனை பேர் மாஸ்டரை முதன்முதலாக சந்திக்கும் பொழுது, அவரை அறிந்து கொண்டுள்ளோம்?

## இளைஞர் நிகழ்ச்சிகள்



## பன்வேல் ஆசிரமம்

பன்வேல் ஆசிரமம் 13-17 வயதுக்குட்பட்ட 45 குழந்தைகளுக்காக, ஏப்ரல் 20 முதல் 22 வரை, ஒரு முகாமை நடத்தியது. தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்புகள் அந்த வயதினருக்கு தொடர்புடைய விஷயங்களை குறிக்கும் படியாக அமைக்கப்பட்டது. முகாம் ஒரு பிரார்த்தனை நிகழ்ச்சியுடன் ஆரம்பிக்கப்பட்டது. அதில் ஒவ்வொரு குழந்தையையும் ஒரு மெழுகுவர்த்தி ஏற்ற செய்து, கடவுள் பற்றி தங்களுக்கு தெரிந்தவற்றை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். குழுக்களுக்கு புகழ் வாய்ந்த ஆளுமை கொண்டவர்களின் பெயர்களையும், அவர்களிடையே மிகுதியாக வெளிப்பட்ட குணாதிசியங்களையும் பின்பற்றிச் சூட்டப்பட்டன. எடுத்துக்காட்டாக, 'அன்னை தெரஸா - அக்கறையுள்ள மெழுகுவர்த்திகள்'. 'சாரிஜி, மாஸ்டர் - அன்பு விளக்கு' 'ஆபிரகாம் லிங்கன் - நம்பிக்கை ஒளி' போன்ற பல. ஒவ்வொரு குழுவுக்கும் முடிக்கப்படாத கதை கொடுக்கப்பட்டது. அதை அவர்கள் முடித்து, பொம்மைகள் மற்றும் முகமூடி அணிந்து நடித்து காட்ட வேண்டும். ஒருங்கிணைவு, நிர்வாகம், உடல் நலம் & ஊட்டச்சத்து, திறன் & புத்துணர்ச்சி ஆகிய தலைப்புகளில், கலந்துரையாடல்கள், அந்தந்த பிரிவை சார்ந்த தொழில் புரியும் அப்யாசிகளால், நடத்தப்பட்டது. குழந்தைகள் புகைப்படம் பிடிக்கும் நிகழ்ச்சியில், அவர்கள் ஆசிரமத்தின் பசுமைப் பகுதிகளை பிரம்மாதமாகப் படம் பிடித்திருந்ததை பார்க்க முடிந்தது. புதையலைத் தேடல் நிகழ்ச்சி குழந்தைகளை மிக்க மகிழ்ச்சியடைய வைத்தது. பங்கேற்றவர்களுக்கு குழுவின் புகைப் படத்தின் பிரதி ஒன்று நினைவாக அளிக்கப்பட்டது.

## மணப்பாக்கம், சென்னை

17 முதல் 30வயதிற்குட்பட்ட, இளைஞர்களுக்காக 'எளிமையாக இரு, இயற்கையுடன் ஒத்திரு' என்ற நிகழ்ச்சி மணப்பாக்கம் ஆசிரமத்தில் நடத்தப்பட்டது. ஏறத்தாழ 50 இளைஞர்கள் பங்கேற்று, "இயற்கை நடை" யாக ஆசிரமத்தை சுற்றி வந்து, நிகழ்ச்சியை ஆரம்பித்தனர். மரங்களை காப்பாற்றப் பணியாற்றும், உள்ளூர் அரசு சாரா நிறுவனத்தால்(NGO) இந்நிகழ்ச்சி நடத்தப்பட்டது. பங்கேற்றவர்கள் ஆசிரமத்தில் உள்ள பல்வேறு மரங்களைப் பற்றியும் அவற்றின் முக்கியத்துவம் பற்றியும் அறிந்து கொண்டனர். சகஜமார்க்கத்தின் நான்காவது நியமத்தை பற்றி குழுவாக படித்தல் மற்றும் கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அந்நிகழ்ச்சி ஒருவருடன் ஒருவர் செயலாற்ற உதவியாகவும், செயல்முறையாகவும் மற்றும் உபயோகமாகவும் இருந்தது.

# எக்கோஸ் இந்தியா செய்திமடல்

## பனசங்கரி ஆசிரமம், பெங்களூரு



ஜனவரி2012ல், பெங்களூரைச் சேர்ந்த இளைஞர்களை ஒன்றுகூட்டும் முயற்சியில், முறைசாரா நிகழ்ச்சிகள் தொடங்கப்பட்டன. மாதமொரு முறை, ஞாயிறன்று இரண்டு மணி நேரம் இந்நிகழ்ச்சி நடைபெறுகிறது. கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கை, சீராக ஆனால் நிலையாக வளர்கிறது. இந்த குழுவை மிஷன் செயல்பாடுகளில் ஈடுபடுத்திக் கொள்ள ஊக்குவிக்கவும், அதனுடன் லட்சியத்தை நோக்கிய பயணத்தில் ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக் கொள்வதுமே நிகழ்ச்சியின் குறிக்கோளாக இருந்துவருகிறது.

ஒவ்வொரு பகுதியின் தலைப்புகளும் பயிற்சிமுறையை பற்றி இல்லாமல், மற்ற அம்சங்களான, 'நான் ஏன் சகஜ மார்க்கத்தில் உள்ளேன்?', 'நான் என்னவாக இருக்கிறேன்?' மற்றும் 'இருப்பதிலிலிருந்து ஆவதற்கு' போன்ற தலைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. ஒவ்வொரு பகுதியிலும் அவர்கள் புதியதாக கற்றுக் கொள்ள வரைபடம், இசை, கவிதை, நாடகம் போன்றவற்றை கையாள்வதில் முயற்சிகள் எடுக்கப்பட்டன. தலைப்புகளில் ஆழ்ந்து உள்முகமாக ஈடுபடுதலும், கலந்துரையாடலும் மட்டும் இல்லாமல், மகிழ்ச்சியையும் ஒன்றிணைந்திருத்தலையும் உணர்ந்து, கலந்துக் கொண்டவர்கள் ஒரு குழுவாக இணைந்திருக்க உதவவும், விளையாட்டும் மற்றும் பல செயல்பாடுகளும் எடுத்துக் கொள்ளப்பட்டன. அனைத்து பகுதியின் இறுதியிலும், மாஸ்டரது உரை அல்லது வீடியோ காண்பிக்கப்பட்டதால், அத்தலைப்பில் தெளிவை ஏற்படுத்தி, அவர்களின் எண்ணங்களையும் உற்சாகப்படுத்தியது. குடியிருப்பு முகாம்கள், அருகிலுள்ள மற்ற மையங்களை பார்வையிடுதல், நாடகம் தயாரித்தல், ஒளிப்படக் கலைப் போட்டி போன்ற பல செயல்பாடுகளை, வரும் மாதங்களில் செயல்படுத்த, திட்டங்கள் உள்ளன. இந்த குழு மாஸ்டரின் வழிகாட்டுதலில் வளரும் என்றும், மேலும் அவர்கள் கல்லூரி அல்லது வேலைகளில் ஏற்படும் அழுத்தங்களை சகோதர, சகோதரிகளின் ஆதரவுடன் சமாளிப்பார்கள் என்ற எதிர்பார்ப்பும் உள்ளது.





## மஹாராஷ்ட்ரா

ஆன்மீக பயிற்சிமுறையின் முக்கியத்துவத்திற்கு இளைஞர்களை திருப்பும் எண்ணத்துடன், இரு நாள் நிகழ்ச்சி ஒன்று, மும்பை பன்வெல் ஆசிரமத்தில், ஏப்ரல் 14, 15 தேதிகளில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் மும்பை, பூனே, நாசிக் மையங்களிலிருந்து சுமார் 78 அப்யாசிகள் கலந்து கொண்டார்கள். இந்த கருத்தரங்கின் கருப்பொருள், 'அவர் வழியை பின்பற்றுதல்' ஆகும். அது, மூன்று பிரிவுகளாக, 'நான் என்ன செய்ய வேண்டும்?', 'நான் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?', 'நான் உள்முகமாக எவ்வாறு இருப்பது?ஆகிய மூன்று கேள்விகளுக்கும் பதிலளிக்கும் வகையில், அமைந்திருந்தது. அதில், சாதனா, நற்பண்புகளை வளர்த்தல் மற்றும் மனப்பான்மையும், மாற்றமும் போன்ற தலைப்புகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இதனைத் தொடர்ந்து பத்து நியமங்களைப் பற்றிய செயல்பாட்டு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. மிஷனில் தன்னார்வத் தொண்டின் முக்கியத்துவம் பற்றி ஒரு தொகுப்பாளர் விளக்கினார். இரண்டாம் நாள் கேள்வி பதில் நிகழ்ச்சியில், அனுபவமிக்க அப்யாசிகள், பிரிசெப்டர்கள், பணியாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள், பயிற்சிமுறையின் அடிப்படைகள், தினசரி பயிற்சியில் தெளிவு, அனுபவங்கள் போன்றவற்றில், கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்து, இளைஞர்களிடம் இருந்த பல சந்தேகங்களை தெளிவுபடுத்தினார்கள். மனப்பான்மையும், மாற்றமும் என்பதன் முக்கியக் கருத்தை அளித்தபின், பல வேடிக்கை நிகழ்ச்சிகள் இருந்தன. பூனே மையத்தை சேர்ந்த சகோ. அமோல் 'தியானம்' என்ற தலைப்பில் animated 2D வீடியோ ஒன்றைப் பகிர்ந்து கொண்டார். சகஜ மார்க்கப் புத்தகங்கள் பற்றிய சிறிய படக்காட்சி விளக்கத்திற்கு பின்னர், சில பஜனைகள் இடம் பெற்றன.

## நொய்டா

நொய்டா மையத்தை சேர்ந்த இளைஞர் குழு, 6-11வயதுடைய சுமார்60 குழந்தைகளுக்கு, பல செயல்பாடுகளையும், நிகழ்ச்சிகளையும், மே மற்றும் ஜூன் மாதங்களில், இரு வாரத்திற்கு ஒருமுறை கோடை வகுப்புகளாக, ஏற்பாடு செய்திருந்தது. நட்பு, பகிர்ந்து கொள்ளுதல், இணைந்து செயலாற்றுதல், கவனிக்கும் கலை போன்ற பல தலைப்புகளில் வகுப்புகள் நடத்தப்பட்டன. 6 முதல் 10ம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு வகுப்புகள் நடத்தவும், நன்னெறி அடிப்படையிலான ஆன்மீக வகுப்புகளை நடத்த பள்ளிகளை அணுகவும் இக்குழு திட்டமிட்டுள்ளது.

# எக்கோஸ் இந்தியா செய்திமடல்

## குழந்தைகளுக்கான கோடைகால வகுப்புகள்





### மணப்பாக்கம், சென்னை

7லிருந்து 13வயதிற்குட்பட்ட 120 குழந்தைகள், மே 7 முதல் 9-ந்தேதி வரை மணப்பாக்கத்தில் ஒன்றாக குழுமியிருந்தனர். முதல் நாளில் பல்வேறு நிகழ்ச்சிகள், கைத்திறன் பகுதிகள், 'ஒழுக்கத்தில் அன்பு' என்ற தலைப்பில் வெளி விளையாட்டுகள் போன்றவை இடம்பெற்றன. பின்னர், நன்னெறி சார்ந்த படம் ஒன்று குழந்தைகளுக்காக திரையிடப்பட்டது.

இரண்டாம் நாளில் 'எளிமை மற்றும் உள்ளுணர்வு' என்பது முக்கிய கருத்தாக அமைந்தது. ஒரு கைத்திறன் பகுதி, கலந்துரையாடலுடன் கூடிய கற்றலை ஊக்கப்படுத்தும் வகையில் அமைந்த வினாடி வினா நிகழ்ச்சி மற்றும் பானை செய்யும் சக்கரத்தில் அவர்கள் தங்கள் கைகளை கொண்டு முயற்சித்தல் போன்றவை குழந்தைகளை சுறுசுறுப்பாகவும் ஊக்கத்துடனும் வைத்திருந்தன.

மூன்றாம் நாளின் கருத்தாக 'உடல் வளம் மற்றும் இயற்கையுடன் இணைந்திருத்தல்' என்பது அமைந்தது. உடல் வரைபடம் பற்றிய ஒரு குறும்படம், T-சட்டையில் வண்ணம் பூசுதல், பொம்மலாட்டம் மற்றும் புதையல் வேட்டை போன்ற நிகழ்ச்சிகள் அனைவருக்கும் மகிழ்ச்சியை உண்டாக்கியது. இந்த வகுப்பின்போது உருவாக்கப்பட்ட பொருட்கள் இடம் பெற்ற ஒரு பொருட்காட்சியும் இருந்தது. இந்த நிகழ்ச்சியின் விரிவாக்கமாக அடுத்த நாள், 'Tree walk' என்ற பகுதியை உள்ளூர் NGO ஒன்று நடத்தியது. நிறைய குழந்தைகள் இதில் பங்குபெற்று ஆசிரமத்திலுள்ள வெவ்வேறு மரங்களைப் பற்றி அறிந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சி பற்றிய குழந்தைகள் மற்றும் பெற்றோர்களின் விமர்சனங்கள் மிக நேர்மறையாகவும் ஊக்கமளிப்பதாகவும் இருந்தன.

### வதோதரா

மே 26, 2012, சனிக்கிழமை அன்று வதோதரா மையம், குழந்தைகளுக்காக கோடைகால வகுப்பு ஒன்று ஏற்பாடு செய்திருந்தது. அதில் 60 பேர் கலந்துகொண்டனர். இந்த நிகழ்ச்சியில், லாலாஜி மற்றும் பாபூஜி மகராஜ் அவர்களைப் பற்றிய விளக்கப்படங்கள், பாடல்கள், கதைகள் மற்றும் விளையாட்டுகள் ஆகியவை இருந்தன. நீதி நெறிகளைப் போதித்த வெவ்வேறு நிகழ்ச்சிகளின் மூலம், குழந்தைகள் நன்மையடைந்தனர்.



### பன்வேல், மும்பை

மே 25முதல் 27வரை நடந்த வகுப்பில் 8முதல் 12வயதிற்குட்பட்ட 20 குழந்தைகள் பங்கேற்றனர். குழந்தைகள் குழுக்களாக பிரிக்கப்பட்டு, கொடுக்கப்பட்ட தலைப்புகளில் மூன்றாவது நாள் நடித்துக் காட்டினர். அவர்கள் இயற்கை பற்றிய பல்வேறு பத்திரிகைத் துணுக்களை ஒட்டி வைத்தனர். இசை வகுப்பில், அவர்களில் சிலர் இயற்றிய பாடலை கற்கவும் பாடவும் செய்தனர். மாலை வேளையில் வானத்தைக் கருத்தூன்றிப் பார்க்கும் நிகழ்ச்சி அனைவராலும் ரசிக்கப்பட்டது. குழந்தைகள், கயிற்றைப் பிடித்துக்கொண்டு சுவற்றிலிருந்து இறங்குதல் போன்ற சில சாகசங்களை, கைதேர்ந்த பயிற்சியாளர்களால் பயிற்சியளிக்கப்பட்டு, செய்து காண்பித்தனர். அவர்கள் குழுச் செயல்பாடு, புதிய விஷயங்களை அறிதல் மற்றும் பெரிய அளவில் வேடிக்கைகளை உள்ளடக்கிய நிறைய குழு விளையாட்டுகளை விளையாடினர். கலை மற்றும் கைத்திறன் பயிற்சியில் குழந்தைகள் உருவாக்கிய வண்ணமய நிழற்பட சட்டங்களில் அவர்களது குழு புகைப்படங்கள் ஒட்டப்பட்டு நினைவுச் சின்னங்களாக கொடுக்கப்பட்டன. 'ஆற்றல்' பற்றிய வினாடி வினா நிகழ்ச்சியும் நடத்தப்பட்டது. முழு ஆசிரமும் ஒரு சிறப்பான சூழ்நிலையில் மூழ்கி, அந்த சின்னஞ்சிறிய வெகுளியான உள்ளங்களைப் பேணியது.

### பிலிபிட்

மே 25முதல் ஜூன் 3ஆம் தேதி வரையிலான 10 நாட்களில், பிலிபிட் மையத்தில், காலை 6.30 மணிமுதல் 9.30மணிவரை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கோடைகால வகுப்புகளில் கலந்து கொள்ள 10முதல் 14 வயதுள்ள குழந்தைகள் ஒன்று கூடினர். ஊக்கம், படிப்பினை மற்றும் சிரிப்பும் நிறைந்த நிகழ்ச்சிகள் பல இருந்தன. நல்லொழுக்கம், சமுதாய நன்னெறிகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு செயல்பாடுகளைத் தொடர்ந்து, விளையாட்டுக்கள், வரைதல் மற்றும் கட்டுரை எழுதுதல் ஆகியவையும் இருந்தன.

கடைசி நாளன்று, பெற்றோர்கள் மற்றும் காப்பாளர்களுக்கு, வரவேற்புக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. பங்கேற்றவர்கள், இக்கோடைகால வகுப்பிற்குபின், குழந்தைகளின் நடத்தையில் ஏற்பட்டுள்ள கண்கூடான முன்னேற்றம் குறித்து மகிழ்ச்சி தெரிவித்தனர்.

# அறிவிப்புகள்

**மாஸ்டரின் 86 -வது பிறந்தநாள் விழா.**
திருப்பூர் டயமன்ட் ஜுப்ளி பார்க்கில் 23 முதல் 25 ஜுலை 2012 வரை நடக்கும் மாஸ்டரின் 86-வது பிறந்தநாள் விழாவில் கலந்துகொள்ள அனைத்து அப்யாசிகளும் அன்புடன் அழைக்கப்படுகிறார்கள்.

**புதிய நியமனங்கள்:**
**மண்டலம் 2A தமிழ்நாடு வடக்கு**
சகோ. பிரகாஷிடமிருந்து சகோ. B.S முருகன் (ஒசூர்) பொறுப்பேற்கிறார்.

**மண்டலம் 8 மத்திய பிரதேசம்**
சகோ. விகால்ப் முந்த்ராவிடமிருந்து சகோ. பிரபாகர் தாஸ் (போபால்) பொறுப்பேற்கிறார்.

**மண்டலம் 12B மத்திய உத்திர பிரதேசம்**
சகோ. ஷ்யாம்ஜி மல்ஹோத்ராவிடம் இருந்து சகோ. அசோக் கார்க் (லக்னோ) பொறுப்பேற்கிறார்.

**க்ரெஸ்ட் ரிட்ரீட் சென்டர், பன்ஷெட்**
சகோ. K.T. மஞ்சுநாத் இடமிருந்து 15 ஜுன் 2012 முதல் மேனஜராக சகோ.Dr. ராஜேந்த்ர ராத்தோர் பொறுப்பேற்கிறார்.

**க்ரெஸ்ட், பங்களுரு (Bangalore)**
சகோதரி Dr. சீதா குஞ்ஜிதபாதம் மே 2012 முதல் சகோ. Dr. A. பெருமாள் இடமிருந்து டைரக்டராக பொறுப்பேற்கிறார்.



"அன்பரை, அன்பிற்குரியவரின் அருகாமையில் கொண்டு செல்வது நினைவு. இந்த நெருக்கத்திற்கு எல்லையில்லை. அன்பும், ஈடுபாடும் அதிகமாக, அதிகமாக அவரை நோக்கிய முன்னேற்றமும் அதிகமாகும். இந்த உறவு மரபுரிமையாக வருகிறது. இப்போது இதை வளர்த்துக்கொண்டு, அவருக்கு அருகாமையில் நம்மை தக்கவைத்துக்கொள்வது என்பது, நம்மைப் பொறுத்து இருக்கிறது."

ராம் சந்த்ராவின் முழு படைப்புக்கள், பகுதி1, அத்தியாயம் 'நியமம் 2', பக்கம் 207, பாபூஜி மகராஜ்

## பல்கான் (Pulgaon) ஆசிரம திறப்பு விழா

மாஸ்டர், மஹாராஷ்டிராவிலுள்ள பல்கான் ஆசிரமத்தை ஏப்ரல் 22-ம் தேதி வீடியோ மூலம் திறந்து வைத்தார். மேலும் ஆசிரமத்தில் இருந்த அப்யாசிகளுக்கு சத்சங்கம் நடத்தினார். மண்டல பொறுப்பாளர் சகோ. வைத்யாவுடன், சில அப்யாசிகளும் மாஸ்டருடன் அன்று மணப்பாக்கத்தில் இருந்தனர்.

சிறியதும், அழகானதுமான பல்கான் ஆசிரமம், மொத்தம் 10494 சதுர அடிகள் கொண்டது. 2290 சதுர அடிகள் கொண்ட தியான மண்டபம் சுமார் 300 அப்யாசிகள் தியானம் செய்வதற்கு ஏற்றதாக உள்ளது. மேலும் நூலகம், சமையலறை, உணவு பறிமாறும் இடம், குளிக்குமிடம், கழிவறை ஆகிய வசதிகள் உள்ளன. பல்கான், அமராவதி, வார்தா, யோட்மால், சந்திராபூர் மற்றும் நாக்பூர் மையங்களில் இருந்து 200க்கும் அதிகமான அப்யாசிகள் நிகழ்ச்சியில் கலந்துக்கொண்டனர். மாஸ்டர், ஆன்மீக முன்னேற்றத்திற்குத் தேவையான அனைத்தும் கொடுத்து, தனது அன்பினால் அப்யாசிகளின் இதயங்களை நிரப்புகிறார்.

# பயிற்சி ~நிகழ்ச்சிகள்

## ஜோத்பூர், ராஜஸ்தான்

ஜுன் 3-ம் தேதி, சகோதரத்துவம் குறித்த பயிலரங்கு நடத்தப்பட்டது. நாம் எப்படியாக வேண்டும் என்று மாஸ்டர் விரும்புகிறாரோ அப்படி ஆகவேண்டும் என்ற பிரார்த்தனையுடன் அப்யாசிகள் மிக ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். சுய உள்முக ஆய்வு - நம்முடைய பங்கில் நாம் என்ன செய்ய வேண்டும் பற்றிய கூட்டத்தொடர், மதிய உணவிற்குப்பின் நடத்தப்பட்டது. மாறவேண்டும் என்று தீர்மானிப்பதும், என்ன மாறவேண்டும் என்று தீர்மானிப்பதும் மற்றும் மாற்றத்திற்காக செயல்படுவது என்பதுமே ஒவ்வொரு அப்யாசியும் பகிர்ந்து கொண்ட கருத்தாகும். கீழ்ப்படிதல், பயிற்சியை தொடர்ந்து செய்வது, சேவை ஆகியவற்றால் மாஸ்டருக்கு பூரண ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என்பதே எல்லா அப்யாசிகளின் கருத்தாக இருந்தது. நம் ஒவ்வொருவரிடமும் உள்ள ஆழமான அன்பு, மாஸ்டரை நோக்கியே இருக்க வேண்டும். மாஸ்டரே உதாரணமாக இருந்து நமக்கு கற்பிக்கின்றார். மற்றும் நம்மிடம் என்ன எதிர்பார்க்கின்றாரோ அதன் கருத்துருவமாக இருக்கிறார். மாலை சத்சங்கத்திற்குப் பிறகு ஒரு புதிய தொடக்கத்திற்கான பிரார்த்தனையுடன் கூட்டத்தொடர் முடிவடைந்தது.





## பயிற்சி நிகழ்ச்சிகள் ..... (தொடர்ச்சி)



### ஷில்லாங், மேகாலயா



மே 6ம் தேதி அன்று, ஷில்லாங்கில், முதன் முறையாக, 12 அப்யாசிகளுக்கான ஒரு பயிற்சி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. சிந்தனை மற்றும் கூர்ந்து ஆராய்தல் மூலம் தியான முறையைக் கற்றறிவதே, இந்நிகழ்ச்சியின் நோக்கமாகும். ஒலி- ஒளி படத் துண்டுகள், கருத்துரைகள், செயற்பாடுகள் மற்றும் பாபூஜியின் 'நான் சொல்கிறேன்' என்ற படக்காட்சி ஆகியவை, தங்களின் தற்போதைய தியான முறையில் மாற்றம் தேவை என்பதை, பங்கேற்பாளர்களுக்கு உணர வைத்தன.

### இந்தூர், மத்தியப் பிரதேசம்

மே 26 அன்று, இந்தூர் ஆசிரமத்தில், நாட்குறிப்பு எழுதுவதற்கான, 'நடைமுறை அடிப்படைப் பயிற்சி' என்ற நிகழ்ச்சியில், சுமார் 20 அப்யாசிகள் பங்கேற்றனர். சத்சங்கத்துடன் நிகழ்ச்சி தொடங்கியது. அதனைத் தொடர்ந்து, மாஸ்டரின் ஒரு வீடியோ திரையிடப்பட்டது. அப்யாசிகள், தங்கள் டைரி எழுதும் பழக்கம், முறை பற்றி சுய சோதனை செய்து, குறிப்புகள் எடுத்துக் கொண்டனர். மாஸ்டரின் மேற்கோள்களின் ஒரு விளக்கக் காட்சியைத் தொடர்ந்து, குழுக் கலந்துரையாடல் இருந்தது. நாட்குறிப்பு எழுதுவதன் முக்கியத்துவத்தை முன்னிலைப்படுத்தும் வகையில் இருந்த மாஸ்டரின் 'இயல்பான எளிய ஆன்மா' (Naked Self) என்ற உரையுடன் 'நிகழ்ச்சி நிறைவுற்றது.

### உத்தரப் பிரதேசம்

மே 13 மற்றும் 20 ம் தேதிகளில், கோரக்பூர் மையத்தில், நாட்குறிப்பு எழுதுவதற்கான நடைமுறை அடிப்படைப் பயிற்சி மற்றும் சுத்திகரிப்பு பற்றிய நிகழ்ச்சியில், சுமார் 30 அப்யாசிகள் கலந்து கொண்டனர். வழி காட்டப்பட்ட முறையில், படித்து விட்டு, பின்னர் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுமாறு அப்யாசிகள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். இரண்டாவது அமர்வின் போது, மாஸ்டரின் உரை ஒலிபரப்பப்பட்டது. அப்யாசிகள், சில கேள்விகளுக்கு, தங்கள் கையேடுகளில் பதிலளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். நாட்குறிப்பு எழுதுதல், சுத்திகரிப்பு ஆகியவை பற்றிய இரண்டு தொகுதிகள் கற்பிக்கப்பட்டன. இந்நிகழ்ச்சியானது, பஹ்ரைச் மற்றும் பலியா ஆகிய மையங்களிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.





### திட்டமிடல் பயிலரங்கம், மைசூர், கர்நாடகா

தென் கர்நாடக மண்டலத்தின் பல்வேறு மையங்களின், மாவட்ட மற்றும் மைய ஒருங்கிணைப்பாளர்களுக்கான திட்டமிடல் பயிலரங்கம் ஒன்று, மே 19 மற்றும் 20ம் தேதியன்று, மைசூர் ஆசிரமத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. இம்மண்டலத்தில், 13 ஒருங்கிணைப்பாளர்களும், மற்றும் அவர்களுக்கு உதவி புரிய, பெங்களுரை அடிப்படையாகக் கொண்ட ஒரு தன்னார்வத்தொண்டர் குழுவும் உள்ளனர். பங்கேற்பாளர்கள் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்வதுடன், பயிலரங்கம் துவங்கியது. பின்னர், மண்டலத்தின் நிலை பற்றிய அறிக்கையை, மண்டலப் பொறுப்பாளர் வழங்கினார். பங்கேற்பாளர்கள், குழுக்களாகப் பிரிந்து, மையங்களின் தற்போதைய நிலைமை, கடந்த ஒரு ஆண்டில் நடத்தப்பட்ட முக்கிய செயல்பாடுகள், அவர்கள் எதிர்கொண்ட சவால்கள் ஆகியவை பற்றிக் கலந்துரையாடினர். இரண்டாவது நாள், சத்சங்கத்திற்குப் பின், 'கடமை மற்றும் பொறுப்பு' என்ற மாஸ்டரின் உரையின் வீடியோ காட்டப்பட்டது. மையங்களில் அப்யாசிகளின் தரம் மற்றும் எண்ணிக்கையை மேம்படுத்தும் திட்டங்கள் பற்றி, குழுக்கள் மேலும் கலந்துரையாடினர். பெரிய மையங்கள், ஆசிரம பராமரிப்பு தொடர்பான செயல்பாடுகள் பற்றியும் விவாதித்தன. திட்டமிடல் என்பது, இலக்குகளின் மீது கவனம் செலுத்துவதைக் காட்டிலும், ஒரு இதயம் சார்ந்த அணுகுமுறையாக இருத்தல் வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. திறந்த மனதுடன் பங்கேற்ற அனைத்து பங்கேற்பாளர்களும், புதிய கண்ணோட்டங்களுடன், பொதுவான பிரச்சனைகளுக்குத் தீர்வு கண்டறிந்ததைப் பற்றி மகிழ்ச்சியடைந்தனர்.

### கோத்ரா, குஜராத்

மே 19ம் தேதியன்று, கோத்ரா ஆசிரமத்தில், புதிதாகச் சேர்ந்த 13 அப்யாசிகளுக்கு, க்ரெஸ்ட வழங்கிய முறையின்படி, முதல் நிலை அப்யாசி பயிற்சி நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. சில விருந்தினர்களும், அப்யாசிகளின் உறவினர்களும் கூட, நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். பயிற்சிக்குப்பின், ஒரு வினா- விடைப் பகுதி இருந்தது. அனைத்துப் புது அப்யாசிகளுக்கும், விருந்தினர்களுக்கும், அறிமுக விஷயங்களைக் கொண்ட சிறிய அன்பளிப்பு ஒன்று வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சி, மிஷனில் புதிதாகச் சேர்ந்த அப்யாசிகளுக்கு, மிகவும் ஊக்கமளிப்பதாகவும், விழிப்பூட்டுவதாகவும் இருந்தது.

# எக்கோஸ் இந்தியா செய்திமடல்

## ஒளி மையம்

## ரத்லாம் ஆசிரமம், மத்திய பிரதேசம்




ரத்லாம், மால்வா பகுதி என்றும் அறியப்படும், மேற்கு மத்திய பிரதேசத்தின், முக்கியமான மாவட்டங்களில் ஒன்றாகும். ரத்லாம் நகரம், மாவட்டத்தின் நிர்வாகத் தலைமையகமாக மட்டுமல்லாமல், முக்கியமான வணிக மையமாகவும் உள்ளது. மும்பை மற்றும் டில்லியிலிருந்து, ரயில் மூலமாக ரத்லாம் வந்தடைய, 12 மணி நேரத்திற்கும் குறைவாகவே ஆகிறது. இந்தூர் விமான நிலையம் அருகில் உள்ளது. இது, எல்லை மாநிலங்களான குஜராத் மற்றும் ராஜஸ்தானின் பல பகுதிகளுடனும், மத்திய பிரதேசத்தின் மற்ற பகுதிகளுடனும், சாலை வழியாக நன்கு இணைக்கப் பட்டுள்ளது. மிஷனின், இந்தூர், உஜ்ஜைன், வதோதரா ஆகிய மையங்கள் அருகில் உள்ளன.

மாநில நெடுஞ்சாலை 10-ல், உள்ள கிராம் பார்பட் என்னும் இடத்தில் அமைந்திருக்கும் இந்த ஆசிரமம், ரத்லாம் ரயில் நிலையத்திலிருந்து 6 கி.மீ தொலைவில் உள்ளது. இதன் மொத்த பரப்பளவு 14,500 சதுர அடியாகும். சுமார் 100 பேர் அமரக்கூடிய, 1200 சதுர அடியுள்ள தியான மண்டபம் கட்டப்பட்டுள்ளது. இதைத் தவிர, ஒரு சமையலறையும், நன்கு பராமரிக்கப்பட்டு வரும் ஒரு தோட்டமும் உள்ளன.




அப்யாசிகள் வாங்கியுள்ள மனைகள் அமைந்திருக்கும் குடியிருப்பின் ஒரு பகுதியாக ஆசிரமம் உள்ளது. மிஷன் சார்பாக, சகோ. உமாசங்கர் பாஜ்பாய், நில சம்பந்தப்பட்ட சட்ட விதி முறைகளை முடித்த பின்னர், மாஸ்டரின் அனுமதியுடன், 27 ஜூன் 2010 முதல், புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஆசிரமத்தில், தியானம் தொடங்கப் பெற்றது. தற்சமயம், ரத்லாம் மையத்தில், சுமார் 65 அப்யாசிகள் உள்ளனர்.

1993 ல் இரண்டு அப்யாசிகளுடன் இந்த மையம் தொடங்கப்பட்டது. ஏப்ரல் 2004ல், தற்போதுள்ள ப்ரிபெக்ட் நியமிக்கப்படும் வரை, அண்டை மையங்களான இந்தூர், மற்றும் உஜ்ஜைனைச் சேர்ந்த ப்ரிபெக்டுகள் உதவியுடன், இந்த மையம் நடந்து வந்தது. 2010ம் ஆண்டு, புதிதாக வாங்கப்பட்ட ஆசிரம இடத்தில், ஞாயிறு சத்சங்கம் ஆரம்பிக்கப்படும் வரை, சிட்டிங்குகள், புதன்கிழமை, ஞாயிறு சத்சங்கங்கள், மற்றும் விழாக்கள், ஒரு அப்யாசியின் வீட்டில் நடந்து வந்தன. இந்த ஆசிரமத்திற்கான இடம், 2005ல் அப்யாசிகளால் வாங்கப்பட்டது.



இந்த மையத்தில், புதிய அப்யாசிகளுக்கான பயிற்சிமுகாம், வரவேற்புக்கூட்டங்கள், பள்ளி மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டிகள் நடத்துதல் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறுவதோடு, அங்கு அமைக்கப்பட்டுள்ள ஒரு வரவேற்புக்குழு, ஆன்மிக நாட்டமுடைய அனைவருக்கும் தகவல் மையமாக திகழ்கிறது. இந்த மையம், அருகிலுள்ள சிறிய மையங்களான, க்ஹச்ரொத், ஜஓரா, மன்த்சௌர், நீமுச், விக்ரம் சிமெண்ட் அமைந்திருக்கும் க்ஹோர், மற்றும் பான்ஸ்வாரா ஆகிய இடங்களின் அப்யாசிகளுக்கு, ஞாயிற்றுக்கிழமை சத்சங்கங்கள், முழுநாள் நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு உதவி புரிகிறது.



ரத்லாம் மைய அப்யாசிகளுக்கு, மாஸ்டரை விருந்தோம்பும் அதிருஷ்டமான வாய்ப்பு, இதுவரை கிடைக்கவில்லை. அந்த வாய்ப்பிற்க்காக அவர்கள் அனைவரும் ஆர்வத்துடன் இருக்கின்றனர். எனினும், பூஜ்ய லாலாஜி மகராஜ், ரௌட்டி(ரத்லமிலிருந்து 33கி.மீ.தொலைவில் உள்ள ஒரு கிராமம்) செல்லும் வழியில், ரத்லமிற்கு வருகை புரிந்து, தற்போதைய ஆசிரமத்திற்கு வெகு அருகில் உள்ள பாபா முரக்தாஸின் ஆசிரமத்தில் தங்கியதாக அறியப்படும் செய்தியை அவர்கள் மனதில் போற்றி வருகின்றனர்.

(ராம் சந்த்ராவின் முழு படைப்புகள் பகுதி 2 பக்கம் 122)



**To download or subscribe to this newsletter, please visit http://www.sahajmarg.org/newsletter/india For feedback, suggestions and news articles please send email to in.newsletter@srcm.org**

© 2011 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved. "Shri Ram Chandra Mission", "Sahaj Marg", "SRCM", "Constant Remembrance" and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.This Newsletter is intended exclusively for the members of SRCM. The views expressed in the various articles are provided by various volunteers and are not necessarily those of SRCM.